புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது

உ
சிவமயம்

விரோதி ௵(1889) ஆவணி ௴ உ௨ ஆரம்பமானது

# இந்துசாதனம்

(Supplement to the Hindu Organ)

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம் | ரூ | 5 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 9 00 |
| இலங்கை இந்தியா | ரூ | 8 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 12 00 |
| தொடுவாய்ப்பகுதி | ரூ | 9 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 13 00 |
| தனிப்பிரதி | சதம் | 05 |

முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."
—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு

| | | |
|---|---|---|
| ,, | ஒரு கலம் | ரூ. 10 00 |
| ,, | அரைக் கலம் | ரூ. 5 50 |
| ,, | கால் கலம் | ரூ. 4 00 |
| ,, | ஒரு அங்குலம் | ரூ. 1 00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி.

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—சகூ | யாழ்ப்பாணம்:— ஈசுவர ௵ ஆவணி ௴ கஅ௳ (1937 செப்டம்பர் 2) வியாழக்கிழமை | இலக்கம்—ச0

# இந்திய கரும்பு அபிவிருத்தி

## ஆராய்ச்சியின் பலன்

கரும்பு விவசாயப் பிரச்னைகளைப் பற்றிச் சாஸ்திரிக முறையில் ஆராய்ச்சிகள் இந்தியாவில் பல ஆண்டுகளாக, மாகாண விவசாய இலாகாகளிலும் மத்திய விவசாய இலாக்காவிலும் நடைபெற்று வருகின்றன. ஆனால் 1930-ம் ஆண்டில் சர்க்கரைக்குப் பாதுகாப்பு அளித்ததன் பயனாக, வேளாண்மையிலும் அபிவிருத்தி ஏற்பட்டதுடன், சாஸ்திரிக முறைகளும் அபிவிருத்தியடைந்தன. இந்தியாவில் சக்கரை செய்யப்படுகின்ற மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் விவசாய ஆராய்ச்சி, இம்பீரியல் கவுன்சில் பண உதவியை பெரும்பாலும் கொண்டு அநேக ஆராய்ச்சி சாலைகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இதனோடுகூட சில சர்வகலாசாலை ஆட்கள் இதுபோன்ற துறைகளில் சில விசேஷ பிரச்னைகளில் கவனம் செலுத்தி வேலை செய்ய ஆரம்பித்தனர். இந்திய நிலைமையை நன்கு அறிந்தவர்கள், அநேக ஆராய்ச்சிச் சாலைகள் இருக்க வேண்டிய அவசியத்தை அறிவார்கள். நிலத்தின் மண், நீர், சீதோஷ்ணம் இவைகளைப்பற்றிய சௌகரியங்கள் மாறுபடுதலோடு பொருளாதார நிலைமையும் மாறுபடுகின்றது.

இந்தியாவின் ஒரு பாகத்தில் கரும்புப் பயிர் அதிகமான உஷ்ணத்தையும் அதிகமானகுளிர்ச்சியையும் தாங்கக்கூடிய நிலைமையிலிருக்கின்றது. மற்றொரு பாகத்தில் அதிகமான மழையைத் தாங்கக்கூடிய நிலைமையிலிருக்கின்றது. இந்தியாவின் சில விடங்களில் கரும்புப்பயிர் களிமண்ணில் விளைகின்றது. சிலவிடங்களில் கற்பாறையைச் சார்ந்த விடங்களில் பயிராகின்றது. கரும்பு சம்பந்தப்பட்ட விஷயத்தில் விவசாயத்தின் நன்மையைக் கோரி, அதிகமான விளைவு, அதிகமான சர்க்கரை உற்பத்தி மண்வளம் முதலியவைகளைக் கவனிப்பதே ஆராய்ச்சியின் திட்டங்களாக வகுக்கப்பெற்றிருக்கின்றன. இவைகளைப்பற்றி நன்கு பரிசீலனை செய்யவேண்டும். மனித வாழ்க்கைக்கு, கரும்பு பயிர் செய்தலும் ஏற்ற தொழிலாக இருக்கின்றன. ஆதலால் கரும்பு விவசாயத்தின் லாப, நஷ்டத்தைப் பொருளாதாரக் கண்கொண்டும் கவனிக்க வேண்டும். கரும்பு பயிர் செய்பவனுக்கு எவ்வளவு செலவாகின்றதென்றும், எவ்வளவு வருமானம் கிடைக்கின்றதென்றும் ஆராய்தல் வேண்டும். இவைகளை எல்லாம் ஆராய்ச்சி செய்வதுடன், விவசாயத்தின் அபிவிருத்திக்குரிய மார்க்கங்களை நன்கு கவனிக்க வேண்டும். கரும்பு விவசாயம் செய்வதில் முக்கியமான திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) புதிய வகையான கரும்புகளைப் பயிரிடுதலும், அவைகளைச் சோதனை செய்தலும்.

(2) மண்ணின் வளப்பத்தை ஆராய்தலும் அபிவிருத்திக்கு ஏற்ற முறைகளைச் செய்தலும்.

(3) கரும்பு விளைவின் மூலமாக மற்றைய பயிர்களுக்குப் பிரதிபலிக்கும் நன்மை தீமைகளை ஆராய்தல்.

மேற்கூறிய மூன்று பிரிவுகளும், ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாத நிலைமையிலிருக்கின்றன. இந்த மூன்று பிரிவுகளில் சொல்லியுள்ளவைகளை ஆராய்ந்து அபிவிருத்தி செய்தால் நாம் கோரும் பலாபலன்களை அடையலாம். இன்று சாஸ்திர அபிவிருத்தியின் பயனைக் கொண்டு, கோயம்புத்தூர் ஸ்டேசனில் பலவிதமான கரும்புவகைகள் பயிரிடப்பெறுகின்றன. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இவ்வகைகளில் ஒன்றைக்கூட நாம் காணவில்லை. இவைகளெல்லாம், காட்டுக் கரும்பு உட்பட அநேக கரும்பு வகைகளைக் கலந்து, அவைகளினின்றும் பொறுக்கப்பட்டவைகளேயாகும். காட்டுக் கரும்புகளின் மூலமாகவும் நன்மையுண்டு என்பதை நாம் நம்பவேண்டும். கோயம்புத்தூரில் இவைகளெல்லாம் சேகரிக்கப்பெற்று வைத்திருக்கின்றன. சில கரும்புகளின் முனை வளர்தாங்களில் விளையும் புல்லைப்போன்றும், அடி பிரம்பைப் போன்றும் இருக்கின்றன. காட்டுக் கரும்பு வெகு கடினமாய் அமைந்துளது. நாம் கரும்பு பயிரிடுவதில் அநுபவம் பெறுதவர்களன்று, சென்ற காலத்தில் அளித்ததைப்போன்று தற்கால நிலைமையிலும் Co 319, Co 421 முதலியவை நல்ல பலனையளிக்க முடியும். கோயம்புத்தூரில் தழைகளைச் சிதைப்பதும், மைசூரில் எக்ஸரேக்களைப் பிரயோகம் செய்வதும் செயற்கை வகைகளில் புது வகையான சிறந்த கரும்புகளை உண்டாக்குகின்றன.

புதுமாதிரியான கரும்புகளைப் பயிர் செய்ததும், அவைகளைப் பரிசோதனை செய்யவேண்டிய கடமை ஏற்படுகின்றது. பரிசோதனை செய்வதற்குப் புதிய முறைகள் வெகுசமர்த்தாக உபயோகப் படுத்தப் பெறுகின்றன. நிலங்களையும் கரும்புவகைகளையும் பரிசோதித்ததின் மூலமாகக் கணித சாஸ்திரத்தில் புதியதொரு தொகுதி ஆரம்பமாயிருக்கிறது. இதனால் குறிப்பிடத்தக்கத்த நன்மைகள் பல விளைந்துள்ளன. ஆதலால் கரும்பு வகைகளில் புதிய முறைகளை உற்பத்தி செய்வதில் அனைவரும் முயலவேண்டும். புதியவகைகளை உற்பத்தி செய்ய அதிக பயன்தரும் முறைகளைக் கையாள வேண்டும். நன்றாக ஆராய்ந்து பார்த்தாலும் எல்லா நிலைமைகளுக்கும் தகுந்தமாதிரி ஒரே விதமான கரும்பைப் பயிர் செய்ய முடியாதென்று விளக்கமாகின்றது.

ஆனால் விவசாய நிலைமைகளுக்கேற்ப விதம்விதமான கரும்புகளைப் பயிர் செய்யலாம். பல வகைகளைப் பற்றிப் பேசும்பொழுது, பொதுவாக எருப் போடுதலினால் நன்மை விளையும் என்று கருதப்படுகின்றது. ஆனால் கரும்பு விஷயத்தில் எந்த எருவைப் போடவேண்டும். எந்தெந்தக் காலங்களில் போடவேண்டும். எவ்வளவு எருப்போடவேண்டும் என்பவைகளை நன்கு ஆராயவேண்டும்.

எவ்வித எருவைப் போடவேண்டுமென்பது முக்கியமான விஷயமாகும். உதாரணமாக நைட்ரஜன் (Nitrogen) அதிகமாயுள்ள எருவைப் போட்டோமானால், அதிகமான விளைவு விளையும். ஆனால் கரும்பில் சர்க்கரை வஸ்து குறைந்திருக்கும். ஆதலால் நிலத்தை சாஸ்திரீய மூலமாகப் பரீக்ஷைசெய்து நிலங்களுக்கேற்ற எருவைப் போட்டுவிட்டு விளைவு செய்தால் நல்ல பலன் தரும். நிலத்தின் மண்ணை மாத்திரம் பரிசோதித்தல் போதாது. இந் நிலம் எவ்வளவு காலம் வரை வேளாண்மை செய்யாமல் வைக்கப் பெற்றிருந்ததென்றும், இதில் என்ன பயிரிடப் பெற்றதென்றும் ஆராய்தல் வேண்டும். சில நிலங்களில் நன்றாக நீர் பாய்ச்சினாலும் நல்ல விளைவு உண்டாவது கிடையாது. சில நிலங்கள் சத்துள்ளவையாயிருந்தும் விளைவுக்கு உபயோகப்படாமலிருக்கின்றன. சில நிலங்கள் சத்தற்றவைகளாயிருப்பினும் பயிர் செழுமையாய் வளர்கின்றது. ஆதலால் நிலங்களின் வகைகளை ரசாயன சாஸ்திரத்தின் ஆதாரவைக் கொண்டு நன்கு பரிசீலனை செய்தல் வேண்டும். தேக உறுப்புகளை நன்கு ஆராய்ச்சி செய்வது போன்று, ஓர் செடியின் உறுப்புகளையும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

## திருப்புள்ளிருக்கு வேளூர் திருத்தாண்டகம்

பத்திமையாற் பணிக்கடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
யெத்தேவு மேத்து மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறு
மத்தேனை யமுதத்தை யாவின் பாலை
யண்ணிக்குந் தீங்கரும்பை யரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக் கினேனே.

—அப்பர்சுவாமிகள்

# சீலையில் தீப்பற்றினால் செய்யத்தக்கதுஎன்ன?

### நெருப்பணைக்கும் படைத்தலைவர் திரு. விரசிங்கா கூறும் விபரம்

உங்கள் ஆடை தீப்பற்றிக் கொண்டால் என்ன செய்ய வேண்டும்?

சமீபத்தில் வெள்ளவத்தைமல்லிகா விடுதி மேட்ரன் எரிந்து மாண்டதையும் மற்றொரு பெண்ணுக்குப் பலத்த காயம் ஏற்பட்டதையும் வாசித்தவர்களுக்குத் தானாகவே இக் கேள்வி எழும்; ஆனால் இம்மாதிரியான சம்பவங்கள் அடிக்கடி இலங்கையில் நிகழ்கின்றன.

இக்காரணத்தை முன்னிட்டுக் கொழும்பு தீயணைக்கும் படைத்தலைவர் திரு. பி. ஈ. விரசிங், இம்மாதிரியான அபாயகரமான சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டுமென்பது பொது ஜனங்கள் உணராமலிருப்பதாகத் தெரிகிறதென்று கூறினர்.

மேலும், அவர் ஒரு பத்திரிகை நிருபரிடம் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றியுங் கூறி, என்ன முறையைக் கையாள வேண்டும் என்பதைப் பற்றியும் செய்து காட்ட ஏற்பாடு செய்தார். அவர் கூறியதாவது:—

### திறந்த வெளிக்குப் போகக்கூடாது

ஆடையில் தீப்பற்றிக் கொண்ட ஒருவர் திறந்த வெளிக்குச் செல்லக்கூடாது. ஏனெனில் தீச் சுவாலை அதிகமாகப் பரவும். அல்லது அருகிலிருப்பவர் வாளியில் தண்ணீர் கொண்டுவர முயற்சிக்கக் கூடாது. தண்ணீரும் அவசரத்துக்கு அதிகமாகக் கிடைப்பது கஷ்டம். மேலும் தண்ணீரைத் தெளிப்பதால் தழும்பு ஏற்படும்.

உதவி செய்யப் போகிறவர் ஒரு சாக்கு, போர்வை, கோட்டுப்போன்ற ஒன்றைப் பாதுகாப்புக்காக வைத்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின், கட்டாயப்படுத்தியாவது தீப்பற்றிய மனிதனைக் கீழே படுக்கச் செய்யவேண்டும்; சுவாலை மேல் நோக்கிச் செல்லுமாதலால் முன் பக்கம் தீப்பற்றியிருந்தால் மல்லாக்காகவும், பின்புறமானால் குப்புறவும் படுக்கச் செய்யவேண்டும்.

நின்றால் தீ பாவி மார்பு கழுத்து முகம் ஆகிய முக்கிய அவயவங்களைச் சுட்டு விடும்.

### தீயை அணைக்கச் சட்டையை உபயோகிக்கலாம்

படுத்த உடன், போர்வையால் அருகில்பிடித்து நெருப்பை அணைக்க வேண்டும். ஆளில்லாத விடத்தில் கீழே படுத்து ஏதாவது ஓர் மெல்லிய துணியைக் கொண்டு அணைக்க வேண்டும்.

இதைவிட மிகச் சுலபமான முறை உடனே ஆடையைக் களைந்து விடுவதேயாகும்.

### காயத்திற்குச் சிகிச்சை

நெருப்பை அணைத்ததும் காயமடைந்த பாகத்தின் துணியை அகற்றி விட்டு, ஆரம்ப சிகிச்சை அளிக்க வேண்டும். கொப்பளங்களை உடைத்து விடக்கூடாது. சோடா உப்பை வெந்நீரில் கலந்து உடனே உபயோகிக்க வேண்டும். துண்டை அதே நீரில் தோய்த்துக் காயங்களிற் கட்ட வேண்டும். சோடா கிடைக்காவிட்டால் பஞ்சை உபயோகித்துச் சுட்டுப் போடவேண்டும். எண்ணெய் எக்காரணத்தை யிட்டும் உபயோகிக்கப்படக்கூடாது.

இதற்கிடையிற் பொலிசாருக்கும் தீயணைக்கும் படையினருக்கும் அம்புலன்ஸ் அனுப்படெலிபோனில் தெரிவிக்க வேண்டும். கொழும்பில் இலவசமாக அம்புலன்ஸ் உபயோகிக்கப்படும்.

தனித்த ஓர் செடியைத் தொட்டியில் வளர்த்து, அது எப்படி வளர்ச்சியடைகிறதென்பதை ஆராய்தல் வேண்டும்.

செடி வளர்ச்சியடைந்து வரும் பொழுது, எந்தெந்தத் துறையில் முன்னேறி வருகின்றதென்பதை நன்றாய்க் கவனித்து ஆராய்தல்வேண்டும். இதன் மூலம் பெற்ற அநுபவம், நிலத்தில் இதைப்போன்று பல செடிகளைப் பயிரிடுவதற்குத் துணை செய்யும். சமீபத்தில் இலாகா இம்பீரியல் கவுன்சிலின் சர்க்கரைக் கமிட்டி சிம்லாவில் கூடியபொழுது, ஆராய்ச்சிநிலையங்களிலிருந்து வந்த முன்னேற்ற அறிக்கையைப் பற்றி விவாதித்ததோடு எதிர்கால வேலையைப் பற்றியும் எதிர்காலத் திட்டத்தைப்பற்றியும் விவாதித்தது. அதன் இறுதிக் கூட்டத்தில் சாதாரண மக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டும் சாஸ்திரத்தின் துணை கொண்டு விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டும், சாதாரண மக்களுக்கு உபயோகமாக வேண்டி, கமிட்டி அதுவரை செய்த விஷயங்களனைத்தையும் சுருக்கமாகத் திரட்டி வெளியிடுவதென்று தீர்மானம் செய்யப்பட்டது.

இடையில், விவசாய நிலையில், ஆராய்ச்சியின் மூலமாக என்ன செய்யப்பெற்றதென்பதையும், என்ன செய்யப் போகின்றதென்பதையும்,

தொடர்ச்சி 7-ம் பக்கம்

நமது சிறுகதைப் பகுதி

# சாரதாமணி

*

### கும்பிடப்போனதெய்வம் குறுக்கே வந்தமை

வித்தியாசாலையதிபர் பசுபதியைப் பார்த்து "தம்பி, உம்மை ஒரு விஷயங் கேட்கிறேன்; ஆனால் உத்தியோக முறையிலல்ல, பெண்பிள்ளைகள் விடுதிச் சாலையில் உத்தியோகமாயிருப்பதால் நீர் குடும்பஸ்தனாயிருத்தல் நல்லதென்று பள்ளிக்கூடத்தி லுள்ளார் அபிப்பிராயப் படுகின்றனர்; உமக்கு விவாகம் ஆய்விட்டதோ இல்லையோ என்பதையிட்டு எனக்குத் தெரியாது; இவைகளைப்பற்றிக் கேட்டறியலாமென்று எண்ணித்தான் உம்மை இன்று இங்கே என் வீட்டிற்கு வரும்படி எழுதியிருந்தேன். சிரமப்படுத்தியதைப் பற்றிக் குறை நினைக்க வேண்டாம்; உம்மைப் பற்றி எங்கள் பள்ளிக் கூடத்திலுள்ள தலைமையாசிரியை மற்றைய ஆசிரியைகள் கல்விபயிலும் மாணுக்கப் பெண்கள் எல்லாருக்கும் நல்லெண்ணமுண்டு; நீர் எவருடனும், விசேஷமாகப் பெண்பாலாருடன் மிகவும் மரியாதையாக நடந்து கொள்ளுகிறீர் என்று கேள்விப் பட்டேன்; "நடையும் நடைப்பழக்கம் - நண்புந்தயையும் கொடையும் பிறவிக்குணம்" என்பது நிசமல்லவா? உம்முடைய நடை உம்மை உயர்குடிப் பிறந்தவனென்பதைக் காட்டுகின்றது; இவைகளையிட்டு எனக்குப் பெருஞ் சந்தோஷம்; !இப்படியெல்லா மிருத்தலால் நீர் குடும்பஸ்தனுமா யிருப்பின், "பொனமலர் நாற்ற முடைத்து" என்ற விதமாக அல்லவோ இருக்கும்; ஆனதனுற்றான் விவாகமாய் விட்டதோ அல்லவோ என்பதையும் அறிய விரும்புகிறேன்; மேலும் என்னை விபரீதமாக விளங்கிக் கொள்ள வேண்டாம்; நான் அதிபர் நீர் "கிளாக்"கர் என்ற முறையில் நான் இவைகளை விசாரிக்க வரவில்லை; உம்மையும் என் பிள்ளை போற் பாவித்துக் கொண்டுதான் இப்படிக் கேட்கலானேன்', என்றார். அதிபர் இப்படிக்கேட்டமாத்திரத்தே பசுபதியின் உள்ளத்திற் பழைய எண்ணம் கவலைகளெல்லாம் சரேலெனக் கிளர்ந்தன; அவன் முகம் வாட்ட முற்றது; நாசியி லிருந்து நெட்டுயிர்ப்புப் பிறந்தது; சற்று நேரம் அவன் வாயினின்றும் ஏதும் பதில் வந்திலது; இவைகளையெல்லாம் அதிபர் கண்டுங் காணார்போலிருந்தார். "ஐயா, நான் கல்யாணஞ்செய்துஞ் செய்துகொள்ளாதவன் நிலைமையிற்றான் இருக்கிறேன்; "மாண்டவர் பின்னும் பின்னும் மாள்வரோ மதியிலாதாய்" என்று முன்னோர் சொன்ன விதமாக இனிமேல் விவாகமே வேண்டாம் என்பதுதான் என் வைராக்கியம்.

அதிபர்:- தம்பி, இப்படிப்பட்ட கருமம் நாம் நினைத்தபடி நடப்பதல்ல; இது விதியின் செயல்; முந்திய கல்யாணத்தினுல் இனிமேற் கல்யாணஞ் செய்தற்குச் சட்டப்படி ஏதுந் தடையுண்டோ? அந்த ஒன்றை மாத்திரம் எனக்கு நீர் சொல்லிவிட்டாற் போதும்.

பசுபதி:- இல்லை, ஐயா, அப்படியொன்றுமில்லை.

அதிபர்:- அப்படியாயின், தம்பி, பெண்களெல்லாரும் ஒரு வகையினரல்லர்; அவர்களுள் நல்லாருமுண்டு; பொல்லாருமுண்டு; உமக்கு வயசும் அதிகம் போகவில்லை யென்பது உம்முடைய தோற்றத்தினுல் அறியக் கிடக்கின்றது; ஆனபடியால் நீர் எவ்வகையான குறையுஞ் சொல்ல முடியாதவளாய், உம்முடைய குலங் கோத்திரத்திற்குத் தக்கவளாய் ஒரு பெண் சந்திக்குமானுல் நீர் விவாகஞ் செய்து கொள்ளத் தடையுண்டோ? ஆனுல் கையில் மடியில் இப்பொழுது பணமில்லையே, கிடைக்கும் வேதனம் அதிகமில்லையே என்ற கவலைகள் உமக்கு வேண்டாம்; அவைகளெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவேன்; நான் கேட்ட விஷயத்திற்கு மாத்திரம் முடிவு சொல்லும்.

பசுபதி:- 'ஐயா, பெற்ற தகப்பன்தானும் கொள்ளாத சிரத்தையும் அன்பும் நீங்கள் என் விஷயத்திற் பாராட்டுகின்றீர்கள்; இதற்கு எவ்வகையான பதிலுபகாரமும் என்னால் உங்களுக்குச் செய்ய முடியாது' உங்களுக்கு நான் ஒன்றையும் ஒளிக்க வொண்ணாது; உங்கள் வாக்கைத்தட்டி நடக்க எனக்கு மனம் எழவில்லை; ஆனால் ஒன்று மாத்திரஞ் சொல்லுகிறேன்; அப்படித்தான் நான் விவாகஞ் செய்வதென்றாலும் எனது அருமையான மைத்துனி, என்னிடத்தில் மெய்யன்பு பாராட்டி என்னை நம்பிக் காத்திருந்தவள், அவளுக்கு நம்பிக்கைத்துரோகஞ் செய்துவிட்டேன்; அந்தப் பழிதான் என் சந்தோஷ வாழ்க்கையைக் கெடுத்தது; அவள் இப்பொழுது எங்கே, என்ன நிலைமையில் இருக்கிறாள் என்பவைகளைப்பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை; அவள் விவாகஞ் செய்யாமல் இன்னமுங் கன்னிகையாகவே யிருந்தால், அவள் என்னை மணப்பதற்கு இன்னமும் உடன்படுவாளேயானால் அவளை மாத்திரம் விவாகஞ் செய்வேன்; இல்லையேல், ஐயா, சொல்லுகிறேனென்று குறைநினையாதீர்கள்; எனக்கு இந்தப் பிறப்பில் இனி விவாகமே வேண்டாம்.

அதிபர்:- சரி,, அவள் இதுவரையில் இன்னொருவனை விவாகஞ் செய்திருந்தால்?

பசுபதி:- நான் விவாகமின்றிச் சும்மா காலங் கழிப்பேன்.

அதிபர்:- அப்படிச் சொல்லுவது ஞாயமல்லவே; அவள் உம்மைக் காத்திருந்தா ளல்லவோ, நீரும் அவளைக் காத்திருக்க வேண்டியது?

பசுபதி:- ஐயா, விஷயம் அப்படியல்ல; அவள் என்னைக் காத்திருந்த காலத்திலேயே நான் அவளுக்கு நம்பிக்கைத் துரோகஞ் செய்து வேறு கல்யாணம் பண்ணிக் கொண்டேன்; ஆனதால் அதன்பின் அவள் வேறுகல்யாணஞ் செய்யாமல் என்ன செய்வாள்? அவளோ பெற்றுரையிழந்த அநாதப் பெண்ணாய் விட்டாள்; அவளுடைய பரிதாப நிலைமைக்கண்டு, அவளுக்குத் தூரித்த இனத்தவராகிய ஒரு பெரிய மனுஷன் அவளைத் தம்முடைய சுவீகார புத்திரியாகக் கூட்டிக் கொண்டு போய் வைத்து அருமை பெருமையாக வளர்த்து வந்தார் என்ற அவ்வளவுந் தான் எனக்குத் தெரியும்- அப்பால் ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லை.

அதிபர்:- அந்தப் பெரிய மனுஷனை நீர் அறிவீரா?

பசுபதி:- இல்லை, நான் அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன் நேரிற் பார்த்ததில்லை.

அதிபர்:- அவருடைய பெயர் சபாபதி முதலியாரா?

பசுபதி:- ஓம், சபாபதி முதலியார் தான் அவருடைய பெயர்; ஐயா, கேட்கிறேனென்று குறையெண்ணக் கூடாது; தங்களுக்கு எப்படித் தெரியும்?

அதிபர்:- முதலியாருக்கும் எனக்கும் நெடுநாட்பட்ட சிநேக முண்டு; அவர் வளர்த்த பெண்ணையும் நான் அறிவேன்; அவள் நல்ல குணவதி; அவளுக்கு விவாகமாகி விட்டதென்று முதலியார் எனக்கு இரண்டு மூன்று மாசங்கட்குமுன் கடிதம் எழுதியிருந்தார்; அவர்கள் நல்ல குலக்குடியிலுள்ளவர்கள்; அந்தப் பெண் உமக்கு மைத்துனியா? சரி, சரி, இப்போதான் எல்லாம் அறிந்தேன்; நடந்ததையிட்டு இனி யோசித்து ஆவதென்ன? நீரும் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்பது தான் என். விருப்பம்; நீர் இப்பொழுது முற்றுஞ் சொல்ல வேண்டாம்; நல்லாய் யோசித்துச் சொல்லலாம்; ஆனால் இந்த விஷயம் அந்தரங்கமாக இருக்கட்டும்" என்று சொல்லிப்பசுபதிக்கு அனுமதிகொடுத்து அனுப்பினார். —(வரும்)

## 13 நாவிதருக்குச் சிறைத் தண்டனை

### அபராதஞ் செலுத்த மறுத்தவர்கள் கை விலங்குடன் சிறைக் கனுப்பப்பட்டனர்

### மட்டக்களப்பிற் பரபரப்பு

மட்டக்களப்பு, ஆக 28

சலூன்களுக்கு அநுமதி பெறவது சம்பந்தமான உபவிதியை நகரசபை வற்புறுத்துவதை ஆட்சேபித்து இங்கு மட்டக்களப்பிலுள்ள சலூன்காரர்கள் எல்லோரும் வேலை நிறுத்தஞ் செய்தார்கள்.

அநுமதிபெற மறுத்த 13 சலூன்காரர்களுக்கு நேற்றைபதினம் பொலிஸ் நீதிபதி தனிச்சனி ரூபாய் 13 அபராதம் விதித்தார். அவர்கள் அபராதம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அவர்களுக்கு 20 நாள் வெறுங்காவல் விதிக்கப்பட்டது. கைவிலங்குடன் சங்கிலியால் இணைக்கப்பட்டுக் கோட்டிலிருந்து சிறைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

தங்கள் சிநேகிதர்கள் இவ்வளவு தாழ்மையாய் நடத்தப்பட்டதால் மற்றச்சலூன்காரர்கள் கோபங்கொண்டிருக்கிறார்கள்.

தான் சட்டத்தைக் கட்டாயமாக நடைமுறையில் நடத்தப்போவதாகநகரசபைத் தலைவர் கூறினர். வேலைநிறுத்தந் தொடர்பாக நடக்குமாகில், வேறே எங்கிருந்தாவது நாவிதர்களைத் தருவிக்க ஏற்பாடு செய்வதாகத் தலைவர் தெரிவித்தார்.

## புதிய தேசாதிபதிக்கு வரவேற்பு

—o—

### உள்நாட்டுமந்திரிசபையின் சுற்றறிக்கை

இலங்கையின் புதிய தேசாதிபதியான ஸேர். ஆண்ட்ரூ கால்டிகாட் அக்டோபர் மாதம் இலங்கைக்கு வரும்பொழுது அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பில் வரவேற்புப் பத்திரங்களும் வாசித்துக் கொடுக்கப்படுமென்று அறியப்படுகிறது.

இது சம்பந்தமாகப் பல பொது ஸ்தாபனங்களுக்கு உள்நாட்டுக் கொமிற்றி அனுப்பியிருக்கும் ஒரு சுற்றறிக்கையிற் புதிய தேசாதிபதிக்கு மேற்படி ஸ்தாபனங்கள் வாசித்துக்கொடுக்க விரும்பும் பத்திரங்களின் பிரதிகளைச் செப்டெம்பர் 15-ந் திகதிக்கு முன்னதாகக் கொமிற்றிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

## அந்தமான் உண்ணுவிரத முடிவு

### ஆனுல் 7 பேர்கள் மாத்திரம் பிடிவாதமா யிருக்கின்றனர்

சிம்லா, ஆக 29

7 பேர்களைத் தவிர இதர அந்தமான் உண்ணுவிரதிகள் தாங்கள் உண்ணுவிரதம் அநுஷ்டிப்பதை நிறுத்திவிட்டனரென்று உத்தியோகமுறையில் வெளியிடப்பட்ட அறிக்கை கூறுகிறது.

## காலியில்ஏராளமான அரிசி இறக்குமதி

காலி ஆக 27

இக்தவார இறுதியிற் காலித் துறைமுகத்தில் ஏராளமான அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது.

நேற்றைய தினம் துறைமுகத்திற்கு வந்த ஜலபத்மாவில் பஸ்ஸெயினிலிருந்து 10,000 மூடை அரிசி வந்தது. இன்று காலையில் றங்கூனிலிருந்துவந்த வரோரா வில் இன்னும் 10,000 மூடைகள் அரிசி வந்தன.

ஞாயிற்றுக்கிழமையன்று கல்கத்தாவிலிருந்து வரும் நவாபில் ஏராளமான அரிசி வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சீனுவுக்கும் ஸோவியத் ருஷ்யாவுக்கும் ஒப்பந்தம்

—:o:—

### அந்நியநாட்டு மந்திரி அறிக்கை

### சீனுவின் கொட்டத்தை அடக்க ஜப்பானியப் பிரதம மந்திரியின் உறுதி

ஷாங்கை ஆகஸ்ட் 29—

சீனுவுக்கும் ஸோவியத் ருஷ்யாவுக்கும் அக்கிரமஞ் செய்வதில்லையென்று ஓர் ஒப்பந்தம் முடிவடைந்திருப்பதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

நாங்கிங்கில் அந்நியநாட்டு ஸ்தானிகர்களின் கூட்டத்தில் சீன அந்நிய நாட்டு மந்திரி மேற்கண்டவாறு அறிவித்தார்.

முன்வந்த செய்தி

நாங்கிங் ஆகஸ்ட் 29 —

சீன-ருஷிய தொடர்புகளைக் குறித்துச் சீன அந்நிய நாட்டுக் காரியாலயம் மிக முக்கியமானதோர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. நடப்பு நிலைமையைத் தெளிவு படுத்தவதற்காக வேண்டிச் சீன அந்நியநாட்டு நாட்டு மந்திரி இதர வல்லரசுகளின் பிரதிநிதிகளை அழைத்திருக்கிறார்.

மாஸ்கோ ஆகஸ்ட் 28

சீனுவுக்கும் ருஷியாவுக்குமிடையில் அக்கிரமிப்பின்மை ஒப்பந்தமொன்று ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்ட செய்தியைக் குறித்து இங்கு விசாரித்தபொழுது தங்களுக்குச் சீன-ருஷியா ஒப்பந்தத்தைப்பற்றி ஒரு தகவலும் கிடையாதென்று ருஷியா அதிகாரிகள் கூறினர்.

#### மங்கோலியா—ஜப்பான் ஒத்துழைப்பு

டோக்கியோ ஆகஸ்ட் 28

மங்கோலிய அரசாங்கத்தின் பிரதம நிர்வாக அதிகாரியும் மங்கோலியத் துருப்புகளின் பிரதம தளபதியுமான டெக்வாங் இளவரசர் ஒரு ஜப்பானிய பத்திரிகை நிருபரிடம் பின்வருமாறு சொன்னர்:—

"7 நூற்றாண்டுகளாக மங்கோலியர்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். இப்பொழுது ஜப்பானுடன் ஒத்துழைப்பதால் மகா மங்கோலியாவைத் திரும்பி ஸ்தாபிக்க நாங்கள் தூக்கத்திலிருந்து எழுந்துவிட்டோம். ஜப்பான் அடையப்போகும் கதியை நாங்களும் அடையத் துணிந்துவிட்டோம். நாம் புறமுதுகு காட்டக் கூடாது. மகா ஜெங்கிஸ்கானின் லட்சியங்களைத் தொடர்ந்து மகா மங்கோலியாவை மீண்டும் நிறுவவேண்டும்.

#### சீனுவை முழங்காற் சிப்பி முறிய அடிக்கவேண்டும்

டோக்கியோ, ஆக 28—

நடப்பு நிலைமையில் சீனமத்திய அரசாங்கத்துடன் ராஜியப் பேச்சுவார்த்தை நடத்திக்கொள்வது சாத்தியமான காரியம். சண்டைக்குப் பயப்படும் மனப்பான்மை அறவே அற்றுப்போகுந் தன்மையில் சீனத்தை முழங்கால் சிப்பி முறிய அடிக்க வேண்டியதே ஜப்பான் கையாளக்கூடிய தகுந்த நடவடிக்கை" மேற்குறிப்பிட்டவாறு ஜப்பானின் பிரதம மந்திரியான கோனேய் இளவரசர் கூறினர்.

#### ஜப்பான் இராணுவ பலம் இரட்டித்துவிட்டது.

இந்தச் சீன-ஜப்பான் சண்டை மிக உக்கிரங்கொண்டதாகவும் வசந்தகாலம் அநேகமாக இலையுதிர் காலம் வரை நீடிக்குமென்றும் சண்டைக்குப் போய்த் திரும்பி வந்த ஜப்பானிய உத்தியோகஸ்தர்கள் சொல்லுகின்றனர்.

சீனரின் எதிர்ப்பை மேற்கொள்ளும்பொருட்டு ஏராளமான படைகளை ஜப்பான் யுத்தகளத்திற்கு அனுப்பி வருகிறது. வேலையினின்றும் இளைப்பாறிய 20 தளகர்த்தர்கள் மீண்டும் இராணுவத்திற்கு அழைக்கப் பட்டிருக்கின்றனர். சமாதான காலத்திலிருந்த இராணுவம் இப்பொழுது இரு மடங்காக்கப் பட்டிருக்கிறது. விரைவில் இது மூன்று மடங்காக அதிகரித்துவிடும். அடுத்தபடியாக ஜப்பானிய விமானங்கள் ஷான்டங் காண்டன் நகரங்களைத் தாக்குமென்று தெரிகிறது.

#### சீனர் நெருக்கப்படுகின்றனர்

இதற்கிடையிற் கடற்படையின் உதவியுடன் ஜப்பானியர் சீனப்படைகளை நெருக்கி வருகின்றனர். அநேக யுத்தோபாயமான இடங்களைச் சீனர் கைப்பற்றிக் கொண்டனரென்று ஜப்பானியர் சொல்லுகிறார்கள்.

சர்வதேசக் குடியேற்றத்துக்குத் தெற்கே மாண்டோ என்ற நகரின் சுற்றுப் பகுதிகளை ஜப்பான் விமானங்கள் வெடிகுண்டு எறிந்து தாக்கியதால் நூற்றுக்கணக்கான சீனர் கொல்லப்பட்டனர்.

#### சீனத் துருப்புகள் முறியடிக்கப்பட்டன

டோக்கியோ ஆகஸ்ட் 28—

ஷாகாரில் சீனத்துருப்புகள் முறியடிக்கப்பட்டன. இதன் பயனுகப் பிப்பிங்கிலிருந்து தெற்கே றெயில் வேப்பாதை வழியாக நிலைமை மிக நெருக்கடியாகவிருக்கும். ஷாகாரில் மங்கோலியத் துருப்புகளைச்சுறுசுறுப்பாக எதிர்க்கின்றன.

## துருப்பிடித்த துப்பாக்கி வெடித்தது

### யானைகளைச் சுடமுயன்றவனின் கைவிரல்கள் சிதறின

தங்காலை ஆகஸ்ட் 28—

மருந்து இடப்பட்டிருந்த துப்பாக்கி தன் கையில் வெடித்ததன் காரணமாகத் தனது இடது கையின் 3 விரல்களை இழந்த டபிள்யூ. பி. அந்திரிஸ் என்பவன் நேற்றைய தினம் றெல்லல என்ற கிராமத்திலிருந்து கொண்டுவரப்பட்டுத் தங்காலை ஆஸ்பத்திரியிற் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

காயப்பட்ட இந்த மனிதனும் கிரிகோரிஸ் என்ற மற்றொரு மனிதனும் சப்ரகமுவை மாகாணத்திலுள்ள கொல்லன்னக்கோரளைக்குச் சேனைப் பயிரிடச் சென்றுவிட்டுச் சென்ற புதன்கிழமையன்றிரவு தங்கள் கிராமத்துக்குத் திரும்பி வந்ததாகத்தெரிகிறது.

அவர்கள் காட்டுவழியாக வருகையில் ஏறக்குறைய 20 காட்டு யானைகளைக்கொண்ட ஒரு கூட்டத்தைக் கண்டார்கள்.உடனே அந்திரிஸ் தனது துப்பாக்கியால் யானைகள்மீது சுட்டான். துப்பாக்கிக்குழாய் அவனுடைய கையிலேயே வெடித்துவிட்டது. இடது கையின் 3 விரல்கள் சிதறுண்டுபோயின. மற்ற இரு விரல்களும் உள்ளங்கையும் படுகாயமடைந்தன.

துப்பாக்கி வெடித்த சப்தம்கேட்டு யானைகள் ஓட்டம் பிடித்தன. காயப்பட்டமனிதன் மற்ற மனிதனுல் அவனது கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டுப் பின்னர்த் தங்காலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டான்.

உடைந்ததுப்பாக்கி, விபத்து நடந்தவிடத்திலேயே வீசப்பட்டது. தான் அந்தத் துப்பாக்கியை ஏறக்குறைய 3வாரங்களுக்கு முன்னரே காட்டிற் கண்டெடுத்ததாகவும் அது துருப்பிடித்த பழைய துப்பாக்கி என்றும் காயப்பட்ட மனிதன் கூறுகிறான்.

# வரகவி பாரதியின் தோற்றம்

[உண்மைத்தோ ழைமியன்

கோ. இராஜகோபால்

'கலாநிலையம்'

யாழ்ப்பாணம் 26-8-37]

தமிழ் நாட்டுத் தனிக்கவிமன்னன் ஸ்ரீ பாரதியின் திருநாள் 11-9-38 ல் வருகிறது. இதையொட்டி நம் தாய் நாடாகிய இந்தியா வெங்கும் குறிப்பாகத் தமிழ்நாடெங்கும் கொண்டாட வேண்டிய ஏற்பாடுகளைப் பாரத மக்கள் தத்தம் ஊர்களிலே கிராமங்களிலே செய்த வண்ணமா யிருக்கின்றனர். ஆகவே நாமும் அவ்வாறு செய்யக் கடமைப் பட்டவர்களாவோம். பாரதியின் பெருமையை என்னென்று கூறுவது? பாரதி பெருமான் தேசபக்தி வெறி கொண்டவர்; தமிழ் நாட்டினிடம் அபார பிரேமை கொண்டவர், மக்கள்மீது அளவற்ற ஆர்வமுடையவர்; "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்குங் காணோம்" என்ற பாக்களால் தமிழ் மீதுள்ள தீராக் காதலை வெளிப் படுத்தினவர்; தேச விடுதலையில் அல்லும் பகலும் சிந்தனை கொண்டவர்; தெய்வத்தின் மீது உறுதியான பக்தி கொண்டவர்; ஜாதி வேற்றுமையற்றவர்; சமயத்திற் பெரும் பற்றுள்ளவர்; சொல்லும் செயலும் ஒன்றுபட்டவர்; பெண்விடுதலையிற் பேரார்வங் கொண்டவர்; இத்தகைய சிங்கம் போன்றார் வீழ்ந்தார். தலைமுறை தலைமுறையாக மக்கள் அவரை மறக்க மாட்டார்கள். அவரது அஞ்சா நெஞ்சை நாம் போற்றுவோமாக. அவரது எளிய வாழ்வை நாம் பின்பற்றுவோமாக. அவரது சுறுசுறுப்பை நாம் அடைவோமாக. தமிழ் நாடும் தாய்நாடும் புதுவாழ்வும் பெருவாழ்வும் பெறவேண்டு மென்பதே பாரதியாரின் கனவாக இருந்தது; அவர் கனவை நனவாக்கச் செய்வதற்கு இலங்கையர்கள் இங்கிருந்து என்ன செய்ய முடியும்? ஆயினும் ஒன்று செய்யலாம். அவர் தமிழன்பர்களுக்கு அருளித் தந்த பாடல்களை நகரங்கள் தோறும் கிராமங்கள் தோறும் தெருக்கள் தோறும் வீடுகள் தோறும் தமிழ் முழக்கஞ் செய்யலாம். அப்பெருமானது வாழ்க்கையின் இலட்சியத்தைப் பொது மன்றங்களிற் ஜனங்களுக்கு எடுத்துரைக்கலாம். முக்கியமாக ஆசிரியர்களும் மாணவிகளும் அப்பெரியாரது விழாவைக் கொண்டாட வேண்டும். இவ்விதம் என்றும் அழியாத ஞாபகசின்னத்தை நம் கவி பெருமானுக் கேற்படுத்துவோம்.

பாரதிவாழ்க! வந்தேமாதரம்!!

"அச்சமிகும் பேடிமையின்
அடிமைவாழ்வில்
அடங்கியிருந் தறம் மறந்த
தமிழ்நாட்டை
பச்சைமரத் தாணியெனப்
பதியுஞ் சொல்லாற்
பாட்டிசைத்துப் பாலர்களும்
நிமிர்ந்துநின்று
நிச்சயமெந் தாய் நாட்டின்
அடிமை வாழ்வை
நீக்காமல் விடுவ தில்லை
எனமுன்வந்த
துச்மெனச் சுகத்தை யெல்லாம்
துறந்து நிற்கத்
தூண்டியது பாரதியின்
சொல்லேயாகும்"

நாமக்கல் வெ. இராமலிங்கபிள்ளை

— ❦ —

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி)
(Y. 182. 1-11-36 to 30-10-37.)

தி நாஷனல் மியூச்சுவல் லைவ்

அசோஸியேஷன் ஒவ் ஆஸ்ட்ரலேஷியா லிமிடெட்

"மிகப் பெரிய முன்னேற்றமுள்ள பிரிட்டிஷ் லைவ் காரியாலயம்"

சுத்தமான மியூச்சுவலேயன்றிப் பங்காளரில்லாதது

மிக அதிகமான நன்கொடைப்பணம்
சாதாரணமான விகிதங்கள்
தாராளமான நிபந்தனைகள்

இலங்கைக் கிளை

கோர்னர் சதாம் & குவீன்ஸ் ஸ்ட்ரீட்ஸ், கொழும்பு.

யாழ்ப்பாணப் பிரதிநிதி
எம். வல்லிபுரம்,
மானிப்பாய்.

ஆர். எம். வெஸ்ட்,
ஸிலோன் மானேஜர்

(Y. 134. 1-9-36 to31-8-37) (வி)

## இந்திய கரும்பு அபிவிருத்தி

1-ம் பக்கத் தொடர்ச்சி

கருக்கமாக வெளியிடுதல் நன்மை பயக்கும். விவசாய இலாகாக்களின் பிரசாரத்தின் பயனாக இந்தியாவில் சிறந்த கரும்பு விளையும் நிலங்கள் 1931–32ல் 1,168,000 ஏக்கர்களிலிருந்து 1935-36ல் 3,071,153 ஏக்கர்களாக அபிவிருத்தியடைந்திருக்கின்றன. ஒரு ஏக்கரில் விளைந்த கரும்பை ஆராய்ந்து பார்ப்போமானால் அதிலும் அபிவிருத்தியடைந்திருக்கின்றது. ஷாஜான்பூர் எக்ஸ்பரிமெண்ட் ஸ்டேஷனில், ஒரு ஏக்கருக்கு 30 தொன்களும் அல்லது அதற்குக் கொஞ்சம் அதிகமாக விளைவது சகஜம். பம்பாய் மாகாணத்தில் ஒரு ஏக்கரில் 40 தொன்கரும்பு விளையும். தற்போது பம்பாய்ச் சர்க்கரைத் தொழிற்சாலைத்தோட்டத்தில் திறமை வாய்ந்த விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 50தொன் கரும்பு விளைவிக்கின்றார்கள். அசாமில் ஜோராட்டில் 1935-36ம்ஆண்டில்ஒருஏக்கருக்கு 54 தொன் கரும்பு விளைந்திருக்கின்றது. அவ்விடத்தில் அது அதிக விளைவாகும். இவைகளெல்லாம் உதாரணமாகவே காண்பிக்கப் பெறுகின்றன. இதைப்போன்று சாதாரண நடைமுறையிற் பயிர் செய்யக்கூடும்.

நல்லமாதிரியான கரும்புகள் ஏற்ற எருவிட்டு அதிகமாக விளைந்தால், அவைகளுக்காகச் செலவாகும் பணம் குறையும். கரும்பு உற்பத்தி செய்வதற்கு எங்கும் ஒரே வகையாய்ப் பணம் செலவுசெய்யப் பெறவில்லை. சாதாரணமாகப் பார்த்தால் ஐக்கிய மாகாணங்களில் ஒரு மணங்கு கரும்பு உற்பத்தி செய்வதற்கு 4 அணாவிலிருந்து 6 அணாவரை செலவாகின்றது. பீஹார் மாகாணத்தில் 3அணாவிலிருந்து 5 அணாவரையிற் செலவாகின்றது. பீஹார் மாகாணத்தில் சிலவிடங்களில் (விஞ்ஞான) சாஸ்திரத் திட்டங்களைக் கைப்பற்றுவதன் பயனாக ஒரு மணங்கு உற்பத்திசெய்வதற்கு இரண்டணாக்கூடப் போதுமானதாக விருக்கின்றது. கரும்பு பயிரிடுதல் எல்லாவகைகளிலும் அபிவிருத்தியடையவேண்டி உதவியளிக்கும்பொருட்டு மத்திய அரசாங்கம் ஒரு அந்தருக்கு ஒரு அணா விதம் வழங்குவதன் மூலமாக பொருளாதாரத்துறையில் சிறந்த உதவி செய்கின்றது. இந்த நிதியிலிருந்து வெள்ளைச் சர்க்கரை உற்பத்தி செய்யும் எல்லா மாகாணங்களுக்கும் பண உதவி அளிக்கப்பெறும்.

இந்த நிதி, கரும்பு உற்பத்திசெய்யுங் காரியாலயங்களுக்கு உதவவும், கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உதவிசெய்யவும், கரும்பு நல்லவிலைக்கு விற்பனையாகவும், மற்றும் இதுபோன்ற வகைக்கும் உதவியாகும். இதற்காக மாகாணங்களுக்குச் சென்ற மூன்று ஆண்டுகளாக ஒதுக்கி வைக்கப்பெற்ற மொத்தப் பணம் கீழே வருமாறு:—

1934—35, 1935—36 ஆக இரு ஆண்டுகளுக்கும் பத்து லக்ஷ ரூபாய் ஒதுக்கிவைக்கப் பெற்றது. 1936—37-ம் ஆண்டு எதிர்காலத்தில் கொஞ்சம் கூட்டிக் கொள்ளலாம் என்ற நிலையில் 8,52000 ரூபாய் ஒதுக்கி வைக்கப்பெற்றது. கான்பூரிலுள்ள சர்க்கரையைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் இம்பீரியல்கலாசாலைக்கு ஆண்டு ஒன்றுக்கு 2½லட்சம் ரூபாய் செலவாவதையும் இங்கு குறிப்பிட வேண்டும். ஆராய்ச்சி முன்னேறி வருவதுடன், அதன் விளைவுகளும் முன்னேறி வருகின்றன. சிறந்த ஆராய்ச்சியின் பயனாக விவசாயிகள் அபிவிருத்தியடைந்து ஆராய்ச்சிக்குச் செலவிட்ட பணத்திக்கேற்ப நல்ல விளைவு விளைந்து சிறந்த பயன் ஏற்பட்டிருக்கின்றது.

"விவசாயமும் மிருகங்களும்"

## "மடம்"

"ஆறு நாண்டுகிறவரையில் அன்னை தம்பி, அப்புறம் காணுர் நீயார்."

"நன் அம்பலம் செய்த பொன்னம்பல சுவாமியார்" "கதிர்காமத்திற் கண்ட காட்சி."

"கதிர்காமத்திலே உள்ள முருகன் திருக்கோட்டத்திற் கருகாமையில் தொண்டர்கள் வந்து தங்கிச் செல்வதற்காக ஓர் மடத்தை உண்டுபண்ணப் போகின்றோம்" என்றார் பொன்னம்பல சுவாமியார்.

சுவாமிகளே! அடிமைகள் அதற்குச் செய்யவேண்டியது யாது? என்றார் தொண்டர். உடனே பொன்னம்பல சுவாமிகள், அப்பனே!

"அன்றறிவா மென்னுதறஞ் செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை"

என்றார்.

உடனே தொண்டர் தம்மாலியன்ற பொருளுதவி செய்தார். இதனைச் செவிமடுத்து நின்ற அரியநாயகம்பிள்ளையின் வாழ்க்கைத்துணைவி, சுவாமிகளை நோக்கி, ஐயா! பெரியவரே! நானும் இம்முறை கதிர்காமம் வர நினைத்திருக்கின்றேன். முருகப்பெருமான் திருவுளம் எப்படியோ அறியேன், என்றார். சுவாமியார், சிவப்பொலிவு பெருகி, அம்மையே! கட்டாயம் வரவேண்டும். அவ்விடம் வந்தால் வேண்டியவேண்டிய உதவிகளையெல்லாம் நானே செய்வேன். பொன்னம்பலசுவாமியார் மடம் வந்துசேர்ந்துவிட்டால் பின் எல்லா வசதிகளும் உண்டு அம்மையே என்றார். இவ்வளவில் அம்மையார் கதிர்காமம் பாதிவழி சென்றதுபோல் தம்முள் மகிழ்தலை சிறந்தார். பின் சுவாமியாருக்குச் சிறிது பொருளுதவி செய்து, தான் கதிர்காமம் வருவதாக உறுதிமொழி புகன்றார். பின் சுவாமியாரும், தாயே! தவறாது வருக, யான் ஆகவேண்டியனவெல்லாம் செய்வேன்" என்று சொல்லி அம்மையாரிடம் விடைபெற்றுச் சென்றனர்.

பொன்னம்பல சுவாமிகளுடைய நன்மொழிகளை நம்பிய தையலார் தம்மோடொத்த சில அரிவையருடன் ஆண்மக்கள் துணையின்றிக் கதிர்காமம் சென்றார். இரவு மூன்றுமணியிருக்கும், ஒருவாறு பொன்னம்பல சுவாமியார் மடத்தையடைந்து, அங்கு நின்ற ஒருவரைப் பார்த்து "தொண்டரே! தயைகூர்ந்து, அரியநாயகத்தின் மனைவியார் வந்திருப்பதாக, பொன்னம்பல சுவாமிகளுக்குச் சொல்லிவிடுங்கள் என்றார். உடனே அவர் பொன்னம்பல சுவாமிகளுக்கு அதனை விண்ணப்பித்தார். அதற்குச் சுவாமிகள் "இப்பொழுதுதான் நித்திரைக்குச் சென்றேன். எழும்பமுடியாதென்று சொல்லிவிடும்" என்று திருவாய் மலர்ந்தார். சிவனே! அரியநாயகத்தின் அரியநாயகி துணையின்றியென்செய்யக்கூடும். முருகா! முருகா! என்று சொல்லிக்கொண்டு வேறோர் படத்தை நாடிச் சென்றார்.

பொன்னம்பல சுவாமி, பொருள்சேர்க்க இன்னு மொருமுறை அரியநாயகம் வீட்டிற்கு வருவாரா? கதிர்காமயாத்திரை செய்யும்படி பணிப்பாரா?

"துணையோடல்லது நெடுவழி போகேல்."

கடிதன்.

"குளோப்"



அடையாளமுள்ள பட்டர்

இலங்கைத்தீவு முழுவதிலும்
இந்தப் பெயருள்ள பட்டரே திறமானதாகத் திகழுகின்றது

இலங்கை முழுவதிலும் ஓர் அந்தம் தொடங்கி மற்றந்தம் வரையும் "குளோப்" என்னும்பொழுது உயர்ந்தசாதிப் பட்டர் என்பதையே அறியப்படுத்துகின்றது.

வெய்யிலிலுள்ள மேய்ச்சற்றரையில் மட்டான உணவு ஊட்டப்படும் உயர்ந்தசாதிப் பசுக்களில் நின்று சாஸ்திரரீதியாய்ப் பால் கறந்து சாஸ்திரமுறையாக அரசாட்சியாரின் மேற்பார்வையின்கீழ் தயாரிக்கப்படும் இந்த உயர்தர பட்டரில் பெலத்தை அளிக்கும் சீவசத்துக்கள் ஏராளமாயுள்ளன.

யாழ்ப்பாணத்தில்
பெரியதெரு பொன்னுச்சாமியின் மருந்துச்சாலையிலும்
S. M. பிள்ளை பிறதேஷிலும்
பெரியகடை எஸ்மால்ஜி அமிஜியிடமும்
பெற்றுக் கொள்ளலாம்.

G. C ரேச் அன் கம்பெனி, தபால்பெட்டி 243, கொழும்பு.

குளோப் பட்டர்

( Mis 110. 2-9-37 to— )




Y 63. 1-1-37to31-12-37.

# Nethrananda Thailava

## Ceylon's Premier Curative Medicine Oil

# நேத்திரானந்த தைலம்

### இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவே முதல்தரம்

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50
தபாற் கூலி 45 சதம்

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதை படர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி, தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையுங் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடிபோடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயதுவித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகிய பெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் ஏனைய போலித் தைலங்களைப் போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்து கோள்வதும், மாதர் அதிகமாகவிரும்புவதும் 35 வருடங்களாக எவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்,

## இந்த நேத்திரானந்த தைலமே

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்டபெயர் உண்டு என்று வளர்ந்து திரிகிற ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதஞ் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்திற் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல. இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப் பட்டுள்ளது.

### ஓர் உலக அதிசயம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 4 ந் திகதி எழுதிய கடிதத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. T. C. செல்லையாபிள்ளை பின்வருமாறு எழுதுகின்றார்:- "உங்கள் நேத்திரானந்த தைலம் அற்புதமான பலனைத் தருகின்றது. தற்போது விலைப்படுந் தைலங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்ததென்பது அங்கீகரிக்கப்பட்டதொன்று" 12-6-37 இல் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகசுவாமி பின்வருமாறு எழுதியுள்ளார்:- "உலகப் பிரசித்தி பெற்ற உங்கள் நேத்திரானந்த தைலம் எனக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறது" போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்றன்விலை ரூபா 2-50 வேத முதலியார் - பாணந்துறை

### நேத்திரநோய்களுக் கிதினும்சிறந்தது வேறுகிடையாது

ஹெலியலாவிலுள்ள டன்ஸ்லண்ட் தோட்டச் சுப்பிரிண்டெண்ட் மிஸ்ரர் G. ஜெபேட்ஸ் எழுதுவதாவது:-

"சிலகாலமாக நான் உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தை உபயோகித்தேன். தலைக்கு அது மிகச் சிறந்த எண்ணெயாகும். உங்கள் தைலத்தால் நான் மிகப் பெரிய நன்மையை அடைந்துள்ளேன். போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா 2-50 வி. பி. மூலம் அனுப்புவதாயின் ரூபா. 2-95.

### கண் தொந்தரவு தீர்க்கமாக மாறியது

மாத்தளை, 'அபயக்கோன் வளவை'ச் சேர்ந்த திரு. C. D. F. அபயக்கோன் பின்வருமாறு எழுதுகின்றார்:-

அதிகமாக வாசித்ததால் எனக்கு ஏற்பட்டிருந்த கண்தொந்தரவை உங்கள் நேத்திரானந்த தைலம் தீர்க்கமாக மாற்றியது. நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் மிக அதிகமான பலனை அஃது அளித்தது." ஆறு அவுன்ஸ் நிறையுள்ள போத்தல் ஒன்றின் விலை ரூபா 2-50. W. டேனியல் பெர்னாண்டோ வைத்திய சேகர, வேத முதலியார், பாணந்துறை, B. T. S. தலைமைக்காரியாலயம், சொதில் ரோட், கொழும்பு; காஸில் ஹோற்றல், கண்டி.

### நேத்திரானந்த தைலம்

இலங்கையின் முதலாவது நோய் தீர்க்கும் மருத்துவ எண்ணெய்
பெண்களால்விரும்பிவாங்கப்படுவது ஆண்களால் நிச்சயமாகத் தேர்ந்தெடுபடுவது
பரம்பரைத் தலையிடி நோய்க்கும் ஜலதோஷம் அல்லது கபத்துக்கும் பல்வேறு நேத்திர நோய்களுக்கும் விசேஷமானது.

கேளாமலிருக்கவே அனுப்பப்பெற்ற தராதரப் பத்திரங்கள்

திரு. P. S. இளையதம்பி, கலுப்பஹாலி தோட்டம், எழுதுவதாவது:-
"உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தின் பலன் மிகச் சிறந்தது என்று மிகச் சந்தோஷத்தோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்."

திரு. M. L. ஜயசிங்க, எல்டெப் தோட்டம், எழுதுவதாவது:-
மிக உக்கிரமான தலையிடி ஏற்பட்டபோது உங்கள் தைலத்தை உபயோகித்தேன். நான் அடைந்த அற்புதமான சுகத்திற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதனை எனது நண்பரொருவர்க்கும் சிபார்சு செய்தேன். அவரது தலையிலும் கண்ணிலும் ஏற்பட்டிருந்த நோய்களை அது நீக்கிற்று."

திரு. K. A. D. அமரேசிங், ஏடன் சொல்லுவதாவது:-
"நான்கு போத்தல்களை உபயோகித்தபின், நான் புத்தம் புதிய மனிதனைப் போலக் காணப்படுகின்றேன். இரவில் நல்ல நித்திரை வருகின்றது. தேகத்தைப் பொதுவாக நன்கு தயாரிக்கின்றது. ஆயின் இதை உபயோகிப்பதற்கு முன்னரோ அதிகாலை 2 அல்லது மூன்று மணிக்குமுன் நான் நித்திரை பெறுவதே துர்ப்பலமாயிருந்தது."

திரு. P. E. பெர்னாண்டோ, வியங்கவெலாத் தோட்டம்:- "தலை, நாசி, காது சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது மிகச் சிறந்த தைலமாகும்"

திரு. எம். ஏ. செல்லையா, ஆசிரியர் மானிப்பாய்:- "தலை கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது தக்க பலனை யளிக்க நான் கண்டேன்."

மிஸ். B பர்ச், பொலிஸ் பங்களோ, வரக்கப் பொலா:- "உங்கள் எண்ணெய் ஒரு பெரியவரமாகும். அது இல்லாமல் இருக்க முடியாது." போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா. 2-50 W. டேனியல் பெர்னாண்டோ வைத்தியசேகர, வேதமுதலியார் பாணந்துறை,பௌத்தமந்திரய,சொதில்ரோட்,கொழும்பு; காஸில்ஹோற்றல்,கண்டி.

### நேத்திரானந்த தைலத்தின் மூலம் தமது வேலையைக் காப்பாற்றிக் கொண்ட கனவான்

சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பெற்ற தராதரப் பத்திரம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ, பினாங்கில் நடைபெறும் "மலாயாட் ரிபியூனல்" என்னும் பத்திரிகையில் ஆசிரியர் குழாத்தில் ஒருவராகக் கடமை பார்க்கும் திரு. T. சோப் எழுதுவதாவது:- சமீபத்தில் இலங்கையிலுள்ள எனது நண்பரொருவர் உங்கள் நேத்திரானந்த தைலத்தில் ஒரு போத்தலை எனக்கு அனுப்பி வைத்தார். சில காலமாக நான் கண்ணிலுள்ள நோயினால் நான் பெரிதும் வருந்தினேன். இதனால் எனது பத்திரிகை வேலையை விட்டுவிடும்படி கூறிச் சில கண் வைத்திய நிபுணர்கள் தெரிவித்தார்கள் ...... உங்கள் முதற் போத்தலே எனக்கு நன்மை விளைத்திருக்கின்றது என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதில் இன்னுஞ் சில போத்தல்கள் வேண்டும்......தயவு செய்து C. O. D. போஸ்ற்மூலம் இன்னும் இரண்டு போத்தல்கள் அனுப்பி வையுங்கள்." வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்:- வேத முதலியார் W. டேனியல் பெர்னாண்டோ வைத்திய சேகரா. "ஸ்ரீவேதவளவு" பாணந்துறை, சொதில்ரோட், புறக்கோட்டை

| தலைமை ஸ்தானம்: | கிளைஸ்தானம்: |
|---|---|
| வைத்தியசேகா முதலியார், | பௌத்த மந்திர வைத்தியசாலை |
| டப்ளியு. டானியல் பெர்னாண்டோ, | சொதிஸ் ரோட், கொழும்பு-இலங்கை |
| ஸ்ரீ வேதவளவும், பாணந்துறை. | காஸில் ஹோட்டல், கண்டி. |

**தந்தி விலாசம்:- வேதமுதலியார், பாணந்துறை**

Y 70 1-7-7-37 to 30-6-38

### அடைவுநகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவிலிருக்கும் கி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ் அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பியிருக்கும் அடைவு நகைகளை 1937-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி கடையில் வெந்தீசில் விற்கப்படும்.

K. பெரியதம்பி
வெந்தீஸ்மேஸ்தர்.

(Mis 105. 30-8, & 2-9-37.)

அன்போடியைந்த வழக்
கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த
தொடர்பு

### வட இலங்கை உணவுப் பொருள் விருத்திச் சங்கம்

வடமாகாணத்தில் ஐந்து ஏக்கருக்குக் குறையாத நிலமுடைய கமக்காரர் இச்சங்கத்தில் அங்கத்தவராய்ச் சேர்ந்து கொள்ளவும்.

வருட சந்தா ரூபாய் 2. பழைய அங்கத்தவர் தம்மால் வருமதிச சந்தாவை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். எல்லா அங்கத்தவரும் தமது சந்தாவை இச்சங்கத் தனதிகாரி வ. சோமசுந்தரத்துக்கு, திருநெல்வேலி ஒற்றுமை நிதி என்ற விலாசமிட்டு அனுப்பவும். அங்கத்தவர் இச் சங்கச் சேவையால் இலாபமடையலாம்.

சி. சுப்பிரமணியம்
அக்கிராசனர்,

ஒக்ரான், யாழ்ப்பாணம், 2-7-37.
(Q. 72. 6-7 to 5-10-37)

### சாலாமிஸ்திரி லேகியம்

—:o:—

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமூஸ்லி, சப்பேமுத்லிலிபின்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை நாகப்பூ, வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயக்காந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருடைத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிசளிரும் ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதுகாலவு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவுபிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மனி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை.
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
வீட்டு இலக்கம் 33
பழைய வாடி ரோட்டு
கோட்டமுனை
மட்டக்களப்பு, சிலோன்

(Y 64. 1-1-37 to 31-12-37.)

உ

# விளம்பரம்

முகாந்திரம் சீ. எஸ். கே.

## கந்தையாச்செட்டியார்

பிரிட்டிஸ்டோன் டயர் எஜெண்டு,
யாழ்ப்பாணம்.

### புதிதாகத்தருவிக்கப்பட்ட விலைகுறைந்த சிறந்த கிருமபோன்கள் பல்வேறு தினிசுகளிலும் விலைகளிலும் கிடைக்கும்

மேலும், ஜப்பான் சயிக்கிள் சாமான்களும் கார்ச் சாமான்களும் சயிக்கிள்களும் பிள்ளைகளின் விளையாட்டுச் சாமான்களும் (toys) சகாயமான விலைக்கு இங்கே விற்கப் பெறும்.

வியாபாரிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயமான விலைக்கு எம்மிடம் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 43. 1-6-37 to 31-5-38.) வி

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை

# விசேஷ அறிவித்தல்

## எஸ். வீரகத்திப்பிள்ளை அன்ட் சன் ஸ்

(கீர்த்திபெற்ற வியாபார சமுதாயம்)

**யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் விசேஷ கொடை!**
**ஆச்சரியத்தை உண்டுபண்ணும் பெரும் வட்டிக்கழிவு!!**

யாழ்ப்பாணம் பெரியகடையிலும் 3ம் குறுக்குத் தெருவிலும் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் நகைகள் அடைவு பிடிக்கும் எங்கள் ஸ்தாபனங்களில் நிகழும் ஆவணி மாசம் 1ந் திகதி தொடக்கம் அடைவு வைக்கப்படும் எந்தத் தொகைக்கும் குறைக்கவித வட்டியாகிய 100க்கு 8வீதம் அறவிடத் தீர்மானித்திருக்கிறோமென்று இத்தால் யாவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

**பவுண்ட்மார்க் ஓடுகள்! பவுண்ட்மார்க் ஓடுகள்!**

இந்நாட்டுக்கு முன்னொருபோதும் இறக்குமதி செய்யப்படடிராத அத்துணை காத்திரம் பெற்ற ஓடுகளாயிருப்பதினாலேயே ஏராளமாக விலைப்பட்டு வருகின்றன.
இந்த ஆவணிமாசம் 1ந் திகதி தொடக்கம் வேறு அறிவித்தல் கொடுக்கும் வரையும் இந்த ஓடுகள் குறைந்த விலைக்கே விற்கப்படும்.

**எஸ். வீரகத்திப்பிள்ளை அன்ட் சன்ஸ்**
வங்கிக்காரரும் நகை அடைவு பிடிப்போரும்
ஓடுகள் தேக்கமரங்கள் விற்பனை செய்வோரும்.

(Y 109. 11-8-37 to 11-8-38) (வி)

அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற் போஒய்ப்பெறுவதெவன்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residinag at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakas Press, Vannarponnai Jaffna on Thursday, September 2nd 1937